# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 08 | குடியியற்கல்வி | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி-I

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. அனுராதபுர யுகத்தைச் சேர்ந்த எந்த மன்னன் காலத்தில் 10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியர் வீதம் நியமிக்கப்பட்டிருந்தது.
    1. பண்டுகாபய மன்னன் 2. புத்ததாச மன்னன்
    3. வசப மன்னன் 4. மகாசேன மன்னன்

02. இலங்கையில் பிரித்தானியர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சேவைகள்
    1. அஞ்சல்சேவை, வைத்தியசேவை 2. வங்கிச்சேவை, வைத்தியசேவை
    3. போக்குவரத்து, வைத்தியசேவை 4. போக்குவரத்து, வங்கிச்சேவை

03. சமூகத்தில் மிகச் சிறியதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான அடிப்படை அலகு,
    1. சமயநிறுவனம் 2. பாடசாலை 3. குடும்பம் 4. அரச நிறுவனங்கள்

04. ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனம் எத்தனை உறுப்புரையைக் கொண்டது
    1. 45 2. 49 3. 50 4. 54

05. ஒருவருக்கு உடல் நடுங்குதல், கண்கள் விரிவடைதல், ஓடுதல், நாக்குழறுதல், கூக்குரலிடல் என்பன பின்வரும் எவ் மனவெழுச்சிகளினால் ஏற்படுகின்றது?
    1. துக்கம் 2. பயம் 3. மகிழ்ச்சி 4. கோபம்

06. இலங்கைக்கு இலவசக்கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு யாது?
    1. 1943 2. 1945 3. 1948 4. 1972

07. விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் பாவனை, இரசாயன உரப்பாவனை காரணமாக ஏற்படுவது,
    1. மண்வளமாக்கப்படுதல் 2. நீர் சுத்தமாக்கப்படல்
    3. நிலக்கீழ்நீர், ஆற்றுநீர் மாசடைதல் 4. ஆரோக்கியம் கிடைக்கும்

08. “ஒருவர் எல்லோருக்கும் எல்லோரும் ஒருவருக்கு” என்பது எச்சேவையின் மகுட வாசகமாகும்,
    1. தந்திச்சேவை 2. சுகாதார சேவை 3. கூட்டுறவுச்சேவை 4. பொலிஸ் சேவை

09. பாதகமான மனவெழுச்சி நிலைமைகளால் ஏற்படுவது.
    1. கருணை 2. மகிழ்ச்சி 3. உற்சாகம் 4. மனநோய்

10. பௌத்தர்களின் பிரதான சமய விழாக்களில் ஒன்று,

1. கிறிஸ்மஸ் 2. பொசொன் வைபவம் 3. தீபாவளி 4. மகாசிவராத்திரி

11. மடுமாதா கோயில் காணப்படும் மாவட்டம் எது?

1. யாழ்ப்பாணம் 2. திருகோணமலை 3. அநுராதபுரம் 4. மன்னார்

12. முஸ்லிம்களின் புனித பூமி எது?

1. மதீனா 2. மக்கா 3. ஈராக் 4. ஈரான்

13. புவியினுள் நிகழும் பௌதீகச் செயற்பாடுகளில் ஒன்று,

1. சுனாமி 2. வெப்ப அதிகரிப்பு 3. வெள்ளப்பெருக்கு 4. வரட்சி

14. சூறாவளி பற்றிய அபாய அறிவிப்புக்களை வழங்கும் திணைக்களம்

1. கமநலசேவை திணைக்களம் 2. நிலஅளவை திணைக்களம்

3. வளிமண்டலவியல் திணைக்களம் 4. சுகாதார திணைக்களம்

15. இலங்கையில் மனிதச் செயற்பாட்டின் காரணமாக நிகழும் அனர்த்தங்கள்,

1. சூறாவளி 2. வீதி விபத்து 3. சுனாமி 4. இடிமின்னல்

16. மின்குமிழைக் கண்டுபிடித்தவர்,

1. பிளேட்டோ 2. தோமஸ் அல்வா எடிசன் 3. மார்க்கோணி 4. நியூட்டன்

17. பின்வரும் இடங்களில் பிரம்புக் கைத்தொழிற்துறைகள் சிறப்புற்றிருக்கும் இடம் எது?

1. காலி 2. மாத்தறை 3. வேவல்தெனிய 4. கஜுகம

18. அதிகளவில் மூளை உழைப்பை வழங்குபவர்கள்,

1. ஆசிரியர்கள் 2. விவசாயிகள் 3. மேசன்கள் 4. தச்சர்

19. சரியான நோக்கங்களோ, இலக்குகளோ இன்றிச் செயற்படும் போது எந்தவொரு செயற்பாடுகளும் அமைவது,

1. தோல்வியில் முடியும் 2. வினைத்திறனாக அமையும்

3. முழுமையாக அமையும் 4. பக்கபலமாக அமையும்

20. வாழ்க்கையை வெற்றிகரமானதாக உருவாக்குவதற்கு பிரச்சினைகளையும் சவால்களையும் மாற்றியமைக்கும் வழிகளில் ஒன்று,

1. தவறுகளைத் திருத்திக் கொள்ளல் 2. புத்தாக்கங்களில் ஈடுபடாமை

3. உளத்திடத்தை வளர்க்காமை 4. பல்வேறு ஆக்கங்களை உருவாக்காமை

(20x2=40புள்ளிகள்)

## பகுதி -II

**முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01).

I. பொதுச்சேவைகளின் முக்கியத்துவம் இரண்டு தருக.

II. கல்வி மூலம் ஆற்றப்படும் பணிகள் இரண்டு தருக.

III. இலங்கையில் வாழும் இனங்கள் இரண்டு தருக.

IV. பாதசாரிகளால் ஏற்படும் விபத்துக்கள் இரண்டு தருக.

V. மனதை ஒருநிலைப்படுத்தும் பயிற்சிகளுக்கு இரண்டு உதாரணம் தருக.

IV. பிரச்சினைகளைத் தீர்ப்பதனால் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக.

(6x2= 12புள்ளிகள்)



kalvi.lk

(02). I. இலங்கைப் போக்குவரத்துச்சபை மூலம் நடைமுறைப்படுத்தப்படும் விசேட சேவைகள் மூன்று தருக.

II. அஞ்சல் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படும் சேவைகள் நான்கு தருக.

III. மின்சாரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகள் ஐந்து தருக.

(3+4+5 =12 புள்ளிகள்)

(03).

I. உமது பிரதேசத்திற்கு கிடைக்கும் பொதுச்வேவைகள் மூன்று தருக.

II. பொதுச்சேவையில் குடிநீர் வழங்கல் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள் நான்கு தருக.

III. சுகாதார சேவையின் செயற்பாடுகள் ஐந்து தருக.

(3+4+5 = 12புள்ளிகள்)

(04).

I. மனவெழுச்சிகளைப் பயனுள்ளதாக மாற்றிக்கொள்வதற்கான வழிமுறைகள் மூன்று தருக.

II. சமூகத்தில் தலைமைத்துவத்தை இனங்காணக்கூடிய சந்தர்ப்பங்கள் நான்கு தருக.

III. ஜனநாயக ரீதியான தலைவர் ஒருவரிடம் காணப்படவேண்டிய பண்புகள் ஐந்து தருக.

(3+4+5 = 12புள்ளிகள்)

(05).

I. பல்பண்பாட்டு சமூகத்தைக் கொண்ட நாடுகள் மூன்று தருக.

II. பல்பண்பாட்டு சமூகத்தின் பண்புகள் நான்கு தருக.

III. இந்தியாவில் பேசப்படும் மொழிகள் ஐந்து தருக.

(3+4+5 = 12புள்ளிகள்)

(06).

I. இடிமின்னல் தாக்கங்களினால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளும் முறைகள் மூன்று தருக.

II. இரசாயனப் பொருட்கள் பாவிக்கப்படும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக.

III. புகையிரத விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளும் வழிமுறைகள் ஐந்து தருக.

(3+4+5 = 12புள்ளிகள்)

(07).

I. வேலை உலகின் பல்வேறு தொழில்களில் மூன்றைத் தருக.

II. தொழிற்பற்றுடன் செயற்படுவதால் ஏற்படும் பயன்கள் நான்கு தருக.

III. சிறந்த உழைப்பாளிகளின் பண்புகள் ஐந்து தருக.

(3+4+5 = 12புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457